**ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டம் - 2019**

---

ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 5678 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் சீ(3) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்திச் சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்கான சமமான அணுகுமுறையை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,250 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியனாகக் காணப்பட்டதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளினை 2016 பெப்ரவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை. கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2015 யூலை 14 ஆம் திகதிய 03.2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ரூபா 40.82 மில்லியன் தொகையான கட்டுநிதியை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு உரித்தான திகதிக்கு 02 மாதங்கள் தொடக்கம் 11 மாதங்கள் வரையான காலவீச்சிற்கு முன்னர் 201 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன. | கட்டுநிதியை தவறாக பயன்படுத்து வதற்கான சாத்தியம் | தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாக சில பயிற்சி நிகழ்வுகள் தாமதமடையக்கூடும். | கட்டுநிதி மீதான நிதிக் கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி சேவைகளின் வழங்குகையினை விரிவாக்கஞ் செய்தல் மற்றும் வலுப்படுத்தல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்ற பெயரைக்கொண்ட 2 மூலக்கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கூறுகள் | செயற்பாடுகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க் கப் பட்ட பௌதீக செயலாற்ற ல் அலகுகள் | அடையப் பெற்ற செயலாற்ற ல் அலகுகள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி சேவை வழங்கலை விரிவுபடுத்தல் மற்றும் வலுப்படுத்தல் | புதிய பிள்ளை அபிவிருத்தி நிலையங்களின் மாற்றீடு | 75 நிலையங் கள் | இல்லை | கிரய அதிகரிப்புக்கள் மற்றும் செயற்திட்டக் காலப்பகுதியின் நீடிப்புக்கள் என்பவற்றிற்கான சாத்தியம் | பெறுகை நிபுணர் காணப்படாதமை காரணமாகும். எனினும் இந்நடவடிக்கை தற்போது செயன்முறையில் உள்ளதுடன் 2021 மார்ச் மாத இறுதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | செயற்திட்டக் காலப்பகுதியினுள் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டும் அக்கறை கொண்டவர்களிற்காக எதிர்பார்க்கப்பட்ட நலன்களினை பெற்றுக்கொள்வதற்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேவை வழங்கப்படாத மற்றும் குறைவாக சேவை வழங்கப்பட்ட பகுதிகளில் புதிய ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி நிலையங்களை ஸ்தாபித்தல் | 12 நிலையங்கள் | 01 | கிரய அதிகரிப்புக்கள் மற்றும் செயற்திட்டக் காலப்பகுதியின் நீடிப்புக்கள் என்பவற்றிற்கான சாத்தியம் | இவ் அனைத்து நிர்மாண வேலைகளையும் நாங்கள் 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | செயற்திட்டக் காலப்பகுதியினுள் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டும் அக்கறை கொண்டவர்களிற்காக எதிர்பார்க்கப்பட்ட நலன்களினை பெற்றுக்கொள்வதற்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| வசதி முன்னேற்ற மானியத்தை வழங்கல் | 1,700 நிலையங்கள் | 92 | கிரய அதிகரிப்புக்கள் மற்றும் செயற்திட்டக் காலப்பகுதியின் நீடிப்புக்கள் என்பவற்றிற்கான சாத்தியம் | அத்தகைய நுஊனு நிலையங்களை தரமுயர்த்துதல் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தொடரப்படும். தாமதமாக ஆரம்பிக்கப்பட்டமை பிரதானமாக மாவட்டச் செயலகம்∴ பிரதேச செயலகங்களால் பயன்பெறும் நிலையங்கள் தாமதமாக இனங்காணப்பட்டதால் ஆகும். | செயற்திட்டக் காலப்பகுதியினுள் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டும் அக்கறை கொண்டவர்களிற்காக எதிர்பார்க்கப்பட்ட நலன்களினை பெற்றுக்கொள்வதற்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| வருடாந்த ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் | 1,540 நிகழ்ச்சித் திட்டம் | 834 | கிரய அதிகரிப்புக்கள் மற்றும் செயற்திட்டக் காலப்பகுதியின் நீடிப்புக்கள் என்பவற்றிற்கான சாத்தியம் | இச் செயற்பாடு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தொடரப்படும். அத்துடன் செயற்திட்ட இறுதி இலக்கு திட்டமிட்டவாறு அடையப்படும். | செயற்திட்டக் காலப்பகுதியினுள் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டும் அக்கறை கொண்டவர்களிற்காக எதிர்பார்க்கப்பட்ட நலன்களினை பெற்றுக்கொள்வதற்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | செயற்திட்டம் ரூபா 165.34 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்த போதிலும் கேள்வி கோரப்பட்டதற்கான பொருட்கள்.். வேலைகளின் விபரம், பெறப்பட்ட கேள்விகளின் மொத்த எண்ணிக்கை, ஒப்பந்தம் வழங்கப்பட்ட தொகையை வெற்றிபெற்ற கேள்விதாரர் பெயர் போன்ற விபரங்கள் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.10.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி நடைமுறையை மீறுதல் பெறுகை நடைமுறையின் வெளிப்படைத் தன்மையை பாதிக்கக்கூடும். | பெறுகை செயன்முறையிலுள்ள அதிக வேலைப்பழு காரணமாக இச் செயற்பாட்டை பூர்த்தி செய்வதில் தாமதமொன்று காணப்பட்டது. | ஒப்பந்தங்கள் தொடர்பாக அரசாங்க பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | காலி, கலேகணவில் ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி வள நிலையத்தை தரமுயர்த்துவதற்கு ரூபா 10.42 மில்லியன் தொகையான மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1.33 மில்லியன் பெறுமதியான 36 செயற்பாடுகள் தவிர்க்கப்பட்டதுடன் ரூபா 1.19 மில்லியன் பெறுமதியான 15 செயற்பாடுகள் மதிப்பீட்டு தொகையை விஞ்சி நிறைவேற்றப்பட்டிருந்தன. | விலை முரண்கள் மற்றும் நிர்மாணங்களில் தாமதம் ஏற்படக் கூடும். | உலக வங்கி மற்றும் முகாமைத்துவத்தின் அறிவுரையால் அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | – மதிப்பீடுகளை தயாரிக்கும் போது தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட வேண்டும்.<br>– மதிப்பீட்டுத் தொகையினுள் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (iii) | நிர்மாணங்கள் மற்றும் மேம்படுத்தல்களிற்குரிய ஒப்பந்த உடன்படிக்கைகள் சரியாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்களின் செயன்முன்னேற்றம் செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிர்மாணங்களை | ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் மீறப்படுதல். | முகாமைத்துவத்திடம் இருந்து பதில் பெறப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கைகள் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்பிப்பதிலும் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கான காசு வைப்பு திகதியிலும் தாமதம் ஏற்படுதல். | | | |
| (iv) | ரூபா 138 மில்லியன் பெறுமதியான 1,500 தளபாட தொகுதிகளை வழங்கி விநியோகிப்பதற்காக புதினப் பத்திரிகைகளில் மொழி ரீதியாக கேள்விக்கான அழைப்புக்கள் கோரப்பட்டிருந்தன. கேள்விப் பிணை செல்லுபடியாகும் திகதி ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் செய்தித்தாள்களில் முறையே 2018 நவம்பர் 29, 2019 சனவரி 11 மற்றும் 2018 சனவரி 11 ஆக பிரசுரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் கேள்வி ஆவணங்களிலுள்ள மேற்குறிப்பிட்ட திகதி 2019 சனவரி 11 மற்றும் 2019 சனவரி 25 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. மிகக்குறைந்த கேள்வி கோரிய இரண்டு கேள்விதாரர்கள் சமர்ப்பித்த 2019 சனவரி 11 வரை செல்லுபடியான கேள்வி பிணை நிராகரிக்கப்பட்டிரந்தது. இதன் விளைவாக செய்தித்தாள மற்றும் கேள்வி ஆவணங்களில் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கேள்வி பிணை திகதி பிழையாக காணப்பட்டதனால் செயற்திட்டத்திற்கு ரூபா 7.17 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்கு நட்டம் ஏற்பட்டமை மற்றும் பெறுகையில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கான நியாயமான மற்றும் சமமான வாய்ப்பு இழக்கப்பட்டமை. | முகாமைத்துவத்திடம் இருந்து பதில் பெறப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை நடைமுறை சரியாக காணப்பட வேண்டியதுடன் கேள்வி ஆவணங்களில் கேள்விதாரர்களிற்கு தகவல்கள் வழங்கப்பட வேண்டும். |